நில்... கவனி... கடைபிடி!

# செவிக்குறையை தடுப்போம் மொழித்திறனை வளர்ப்போம்




**திருமதி. இரா. சாந்தி**
துணைப்பேராசிரியர்

**திருமதி. க. கலைவாணி**
துணைப்பேராசிரியர், சிறப்புக் கல்வித்துறை

**ஊனமுற்றோர் மையம், சிறப்புக் கல்வித் துறை**
**அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம்**
கோயம்புத்தூர் - 641 043

*வெளியீடு*
**ஊனமுற்றோர் மையம், சிறப்புக் கல்வித் துறை**
**அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம்**
கோயம்புத்தூர் - 641 043
தொலைபேசி எண் : 2440241

2012-13
*அச்சிட்டோர்*
**சாரதாலயா அச்சகம்**
ஸ்ரீ அவினாசிலிங்கம் கல்வி அறக்கட்டளை நிறுவனங்கள்
கோயம்புத்தூர் - 641 043

# செவிக்குறையை தடுப்போம் மொழித்திறனை வளர்ப்போம்

இவ்வுலகில் மனித வாழ்க்கை ஒரு சிறப்பு மிக்க அம்சமாகும். ஆனால் சிலர் ஊனத்துடன் பிறக்கிறார்கள் என்று நினைக்கும் பொழுது மனம் சஞ்சலப்படுகிறது. ஏன், இறைவன் படைப்பில் ஒரு பிழையா? இல்லை. நாம் ஒருவருக்கு ஒருவர் உதவி செய்து சார்ந்து வாழத்தான் இப்படி ஒரு அதிசயப் படைப்பு.

ஊனங்கள் பல வகைப்படும். அவற்றுள் காது கேளாமை என்பது கல்வி கற்பதில் இயலாமையை வெளிப்படுத்தும் ஒரு வகை ஊனமாகும். காது கேளாமை ஏற்படுவதற்கான காரணங்கள், அவற்றைத் தடுக்கும் முறைகள், காது கேளாமையின் தனித்தன்மைகள், காதின் பராமரிப்பு மற்றும் காது கேளாமையை கண்டறியும் முறைகள் ஆகியவற்றைப் பற்றி விரிவாகப் பார்ப்போம்.

**காது கேளாமை ஏற்படுவதற்கான காரணங்கள்**

**பிரசவத்திற்கு முன்**

- வம்சாவழியாக காது கேளாமை ஏற்படுதல்.
- இரத்த இணைப்பில் ஒவ்வாமை.
- அம்மை, தட்டம்மை போன்றவைகளால் கர்ப்பிணி பெண் பாதிக்கப்படுதல்.
- நச்சுத்தன்மையுடைய மருந்துகளை மருத்துவருடைய ஆலோசனை யில்லாமல் உட்கொள்தல்.
- சரிவிகித சத்தான உணவு கர்ப்பிணி பெண்கள் உட்கொள்ளாமை.

**பிரசவத்தின் பொழுது**

- குறை பிரசவம்.
- மூளையை இயக்கத் தேவையான பிராணவாயு பற்றாக்குறை.
- பிறப்பின் போது குழந்தையின் எடை குறைவாக இருத்தல்.
- பிறந்தவுடன் அழாமல் இருத்தல்.
- மருத்துவம் பார்க்க கைதேர்ந்த நிபுணர்கள் இல்லாமை.

**பிரசவத்திற்குப் பின்**

- மஞ்சள் காமாலை, அம்மை, மூளைக்காய்ச்சல் போன்ற வியாதியால் பாதிக்கப்படுதல்.
- நச்சுத்தன்மை கொண்ட மருந்துகளை தொடர்ந்து உபயோகப்படுத்துதல்.
- அதிக அளவிலான சப்தத்தை தொடர்ந்து கேட்டல்.




- காதில் வரும் நோய்களுக்கு சரியான விதத்தில் சிகிச்சை அளிக்காமை.
- காதிலுள்ள பகுதிகளில் சிதைவு ஏற்படுதல்.

**காது கேளாமை - தடுப்பு முறைகள்**

- சொந்தத்தில் திருமணம் செய்து கொள்வதை தவிர்த்தல்.
- மரபணுக்களினால் ஏற்படும் ஊனங்களைப் பற்றி ஆலோசனைகள் பெறுதல்.
- தடுப்பூசிகள் அனைத்தையும் போட்டுக் கொள்ளுதல்.
- தாய்ப்பால் தேவையான அளவிற்கு கொடுத்தல்.


- மருத்துவரின் ஆலோசனைப்படி மருந்துகளை உட்கொள்ளுதல்.
- கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் குழந்தைகள் சரிவிகித சத்தான உணவை உட்கொள்ளுதல்.




- இரத்த இணைப்பின் ஒவ்வாமையை அறிந்து மருத்துவ ஆலோசனை பெறுதல்.
- காதில் வரும் நோய்களுக்கு சரியான சிகிச்சை அளித்தல்.
- அதிக ஒலி அலைகள் காதுகளை சிதைவுபடுத்தாமல் இருக்கப் பஞ்சினை வைத்து பாதுகாத்தல்.

**காது கேளாதவர்களின் தனித்தன்மைகள்**

- பொதுவாக காது கேளாதவர்கள், செய்கை மூலம் பேசுவர்.
- பேச்சுப் பிழைகள் அதிகமாக இருக்கும்.



- பேச்சில் ஏற்ற இறக்கங்கள் குறைவாக அல்லது இல்லாமல் இருக்கும்.
- வேறு எந்த விதமான வெளிப்புற ஊனங்களும் அவர்களுக்கு இருக்காது. அதனால், அவர்களை மற்றவர்கள் சரியாகப் புரிந்து கொள்ள முடிவதில்லை.
- காது கேளாததினால் அவர்கள் ஊமைகள் போல பேச இயலாதோர் ஆகிவிடுகின்றனர்.
- காதில் வலி, சீழ் வடிதல் போன்ற பிரச்சனைகள் காது கேளாத குழந்தைகளுக்கு இருக்க வாய்ப்புகள் உள்ளது.

- காது கேளாத குழந்தைகளால், சாதாரண பள்ளிகளில் சேர்ந்து படிக்க இயலாது.
- காது கேளாதவர்களின் பேச்சு மற்றும் கருத்துக்களை மற்றவர்கள், பல நேரங்களில் தவறாகப் புரிந்து கொள்வதினால் அவர்களுடைய தேவைகள் சரியான விதத்தில் பூர்த்தியாவதில்லை.
- காது கேளாதவர்கள், மற்றவர்களுடன் சுலபமாகக் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ள இயலாததினால், அவர்களுக்கு கோபமும், ஆத்திரமும், ஆதங்கமும் ஏற்பட வாய்ப்புகள் அதிகம் உண்டு. காலப்போக்கில் இது மனதினையும் பாதிக்கலாம்.
- காது கேளாதவர்கள், மற்றவர்களுடன் சுலபமாகத் தொடர்பு கொள்வதற்கான பேச்சாற்றல் இல்லாத நிலையும் ஏற்படுகின்றது.

இப்பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு, காது கேளாதோரும், அவர்களது பெற்றோரும் முயற்சித்தால் போதாது. அவர்களுடன் சேர்ந்து ஆதார ஆசிரியர்கள், தலைமை ஆசிரியர்கள், தொண்டு நிறுவனங்கள், அதிகாரிகள், சட்ட வல்லுனர்கள் மற்றும் நாம் அனைவருமே சேர்ந்து முயற்சித்தால் அவர்கள் நிச்சயமாக வாழ்வில் உயர முடியும்.

**காதின் பராமரிப்பு**

- குழந்தையின் காதில் குளிர்ந்த காற்று புகாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.
- அடிக்கடி சளிப் பிடித்தால் காதில் பிரச்சனைகள் வரலாம். அதனால் சளிக்கு சரியான விதத்தில் தீர்வு காண வேண்டும்.




- தலையில் பொடுகு வருவதினால் காதில் கிருமிகள் உருவாகலாம். அதனால் தலையை வடிகஞ்சி போட்டு சுத்தம் செய்வதின் மூலம் பொடுகினைத் தவிர்க்கலாம்.

- அதிகப்படியான சாம்பு மற்றும் சோப்பு நுரைகள் செல்வதினால் காதில் அடைப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது,

- இயல்பாகவே காது அழுக்கை வெளியேற்றும் விதத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது. அதனால் அழுக்கை அகற்ற நாம் உபயோகிக்கும் முறைகள் மூலம் அழுக்கு மேலும் உள்ளே சென்று கேடுகள் விளைவிக்கக் கூடும்.

- காதில் காது மருந்து ஊற்றும் பொழுது குழந்தையை ஒரு பக்கமாக சாய்ந்தாற்போல் படுக்க வைக்க வேண்டும். பிறகு காதின் மடலை மேல் நோக்கி தூக்கிப் பிடித்த





வாறு காதில் சொட்டு மருந்தை 3 அல்லது 4 செட்டுக்கள் ஊற்ற வேண்டும். காதின் மடலை மேலும் கீழும் அசைப்பதன் மூலம் மருந்து உள்ளே இறங்க வழி செய்யலாம், செட்டு மருந்தை தவறாமல் மூன்று முதல் ஐந்து நாட்கள் வரை தொடர்ந்து ஊற்ற வேண்டும்.

- காதில் சூடான எண்ணெய் ஊற்றுவது, குச்சி வைத்து அழுக்கை எடுப்பது, காதில் அடிப்பது மற்றும் அழுக்கு நீரில் குளிப்பது போன்ற தவறான செயல்களை தவிர்த்தல் வேண்டும்.

**காது கேளாமையைக் கண்டறியும் முறைகள்**

**மொழி வளர்ச்சியின் மூலம்**

- பிரசவத்தில் பிரச்சனைகள் இருப்பின் நிபுணர்களின் கண்காணிப்பில் வைப்பதன் மூலம்
- அதிக அளவு சப்தத்தைக் கேட்டவுடன் குழந்தை அதிர்ச்சியடைந்தது போல் உடலில் அசைவுகளை வெளிப்படுத்துகிறதா?
- அதிக அளவு சப்தத்தைக் கேட்டவுடன் குழந்தை கண்களை மூடித் திறப்பது, அழத் துவங்குவது போன்ற செயல்களை வெளிப்படுத்துகிறதா?
- சப்தம் கேட்டவுடன் சப்தம் உருவான திசையை நோக்கி தலையைத் திருப்புகின்றதா?



- பெற்றோர்கள் கூறும் சிறிய கட்டளைகளை நிறைவேற்றுகின்றதா?

  (எடு) அந்த பென்சிலை எடுத்துத் தா?
- பெற்றோர்கள் பேசினால் முகபாவங்களின் மூலம் குழந்தை பதில் அளிக்கின்றதா? (எடு) சிரித்தல்
- அறிமுகமானவர்களின் குரல் கேட்டவுடன் அமைதி யடையவும், சிரிக்கவும் செய்கின்றதா?
- தினசரி வாழ்க்கையில் ஏற்படும் சப்தங்களை கூர்ந்து கவனிக்கின்றதா?
- பெயரைச் சொல்லி அழைக்கும் பொழுது திரும்புகிறதா?
- கற்றலில் தாமதம் ஏற்படுதல்

- குழப்பம் அடைந்ததற்கான முகபாவனை
- செய்கையின் மூலம் சொல்வதை எளிதில் புரிந்து கொள்ளுதல்
- அதிக அளவில் சைகையின் மூலம் தங்களுடைய கருத்துக்களை வெளிப்படுத்துதல்

**பேச்சு வளர்ச்சியின் மூலம்**

- குழந்தை உளறலை ஏற்றத் தாழ்வுகளுடன் அதிக அளவில் உபயோகப்படுத்துகின்றதா?
- உளறலின் மூலம் குழந்தை புதிய வார்த்தைகளை உச்சரிக்கின்றதா? (எடு) மாமா மாமா... மாமா.
- பெற்றோர்கள் பேசினால் அதற்கு உளறலின் மூலம் குழந்தைகள் பதிலளிக்கின்றதா? (எடு) பசிக்கின்றதா என்று அம்மா கேட்டவுடன் உஉஉ என்ற பதில் கூறல்.




- உளறல் சப்தம் உருவாக்குவதை நாளடைவில் குறைத்துக் கொள்கின்றதா?
- வார்த்தைகளை உச்சரிப்பதில் சிரமம் அல்லது இயலாமை.

**உச்சரிப்பு பிழைகள்**

| | | |
|---|---|---|
| கூட்டல் | - | ஒரு எழுத்தை சேர்த்து உச்சரித்தல் |
| கழித்தல் | - | ஒரு எழுத்தை விட்டு விட்டு உச்சரித்தல் |
| பதிலிடுதல் | - | ஒரு எழுத்திற்கு பதிலாக மாற்று எழுத்தினை உபயோகித்து உச்சரித்தல் |
| சிதைத்தல் | - | முழு வார்த்தையையும் தவறாக உச்சரித்தல் |

பேசும் பொழுது கீழ்க்கண்ட சில குறைபாடுகள் இருத்தல்.

1. அதிக அளவில் மூக்கொலிகளை உபயோகித்தல்.
2. அதிக சப்தத்துடன் பேசுதல்.
3. குறைந்த சப்தத்துடன் பேசுதல்.
4. பேச்சில் ஏற்றத்தாழ்வுகள் இல்லாமல் இருத்தல்.
5. மூக்கொலியை உபயோகப்படுத்தாமல் பேசுதல், பேச்சின் இனிமையை குறைத்து விடும்.

- இரண்டு வார்த்தைகளை கோர்வையாக இணைத்து பேசாதிருத்தல்.




- வாக்கியங்களின் மூலம் கருத்துக்களை வெளிப்படுத்த இயலாதிருத்தல்.
- பிறர் பேசும் பொழுது பலமுறை அவர்கள் கூறியதையே சொல்ல வைத்தல்.


**காதில் ஏற்படும் பிரச்சினைகள் மூலம்**

- காதில் அடிக்கடி வலி ஏற்படுதல்.
- தொடர்ந்து காதில் சீழ் வடிதல்.
- தற்காலிகமாக காது கேளாமல் இருத்தல்.
- காதில் இரத்தக் கசிவு ஏற்படுதல்.
- காதில் காயம் ஏற்படுதல்.

நம் நாட்டில் குறிப்பாகத் தமிழ் நாட்டில், பல சிறப்புப் பள்ளிகளையும், ஒருங்கிணைந்த கல்வித் திட்டங்களையும் செயல்படுத்தும் தொண்டு நிறுவனங்கள் காது கேளாதோரின் குறைகளைக் கண்டறிந்து கல்வி பயிலச் செய்து, வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்து வருகிறார்கள். பொது மக்கள் மேற்கூறிய கருத்துக்களின் மூலம் காது கேளாமையை தவிர்க்கும் முறைகளை அறிந்து, பின்பற்றி மற்றவர்களிடமும் பகிர்ந்து கொண்டு நல்லதொரு சமுதாயத்தை உருவாக்க வழி வகுப்போம்.

NEELKAMAL

# Optical Devices for Low Vision Reading










Dr. G. Victoria Naomi

# Optical Devices for Low Vision Reading

**Dr. G. Victoria Naomi**

M.A.,M.Ed.,Ph.D.

*Associate Professor*

Department of Special Education

Faculty of Education

Avinashilingam Institute for Home Science and Higher Education for Women - University

Coimbatore, Tamil Nadu.

NEELKAMAL PUBLICATIONS PVT. LTD.

EDUCATIONAL PUBLISHERS

(EXPORTERS & IMPORTERS)

HYDERABAD NEW DELHI

# Optical Devices for Low Vision Reading

Dr. G. Victoria Naomi

© All rights reserved.

First Edition : 2014

All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system or transmitted, in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise, without the prior permission of the publisher.

ISBN: 978-81-8316-412-2

Price: ₹ 195/-

**NEELKAMAL PUBLICATIONS PVT. LTD.**

Sultan Bazar, Hyderabad - 500 095.

✆ 24757140, 24757197, 24757944, Fax: 040-24757951

*Delhi Office:*

BG5/9B, Paschim Vihar, New Delhi-110 063,

✆ 011-25285894


website: www.neelkamalbooks.com

e-mail: neelkamalbooks@gmail.com; sales_neelkamal@rediffmail.com

Published by ***Suresh Chandra Sharma*** for

***Neelkamal Publications Pvt. Ltd.,*** New Delhi, Hyderabad

and printed at ***Sri Vinayaka Art Printers***, Hyderabad, India




**ISBN: 978-81-8316-412-2**

## *About the Book*

Optical devices enable the low vision persons to improve visual performance and reduce visual disability. Many people confuse low vision optical devices with standard eye glasses. Standard eye glasses only focus the image for the eye. But low vision optical devices enlarge the image and thus making it easier to see. These devices help low vision person attain functional vision. A Majority of low vision children in school could benefit from the use of low powered optical devices for their reading and writing. But most of the teachers and parents of low vision persons lack knowledge in selection of appropriate optical devices and training in the use of these devices. This book which highlights the research outcomes stands evidence that a majority of children could improve their reading speed and reading comprehension with the use of optical devices. This book can be taken as a well organized guide and a textbook for teachers, researchers, parents, special education students and low vision persons themselves in the use of different optical devices.

## *About the Author*

**Dr. G. Victoria Naomi** is the Associate Professor, Department of Special Education, Avinashilingam Institute for Home Science and Higher Education for Women - University, Coimbatore. She has been in the field for nearly 30 years having wide and rich experience in teaching children with Visual impairment in inclusive settings. She has two books and over 100 articles in the field of Special

ISBN: 978-81-8316-412-2